**13.02.2025**

**MCOP.No. 29/2021**

**ம.சா. 1 : சேது லட்சுமி**

**மனுதாரர் மனுவின் மீது முதல் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1) கோவை கங்கா மருத்துவமனை வழங்கிய 07.08.2017 முதல் 04.10.2017 வரையிலான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.9, 07.08.2017 ம் தேதிய கங்கா மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரியுடன் சேர்த்து மனுதாரர் மனு கொடுத்து பெற்ற மனுவின் நகல் ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 9 மற்றும் 10 ஆவணங்கள் ஆட்சேபணை செய்யப்படுகிறது. ஆட்சேபணையுடள் குறியீடு செய்யப்பட்டது. ஆட்சேபணை தீர்ப்பின் போது விவாதிக்கப்படும்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

2) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 மற்றும் 7 தனி நபர் விசாரணைக்கு பின்பு தான் ஏற்றுக்கொள்ளப்படும் என்றால் சரிதான். நான் இன்று தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத என்றால் சரியல்ல. மேற்படி பில்களுக்கான தொகையை வாகனத்தின் உரிமையாளோரோ அல்லது மற்ற நபர்களோ செலுத்தி அசல் பில்லை பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் அதற்கான தொகையை நான் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

3) நான் பயணம் செய்த வாகனம் நான்கு சக்கர வாகனம் என்றால் சரிதான். அது பின் புறம் திறந்த வாகனம். விபத்து சமயத்தில் என்னுடன் 3 பேர் பயணம் செய்தார்கள். சரவணன் வண்டியை ஓட்டினார். சதிஸ்குமார், சித்ரா, ரெஜினா ஆகியோர் உடன் இருந்தார்கள். சிவக்குமார் என்பவர் யார் என்று தெரியாது. தங்கராஜ் என்பவர் என்னுடன் தான் வந்தார். என்னுடன் ஓட்டுநரை தவிர 5 பேர் பயணம் செய்தோம் என்றால் சரிதான்.

4) விபத்து சமயத்தில் வாகனத்தில் சரக்கு இல்லை. வாங்குவதற்கு சென்று கொண்டு இருந்தோம். அந்த வாகனத்தில் ஓட்டுநர் தவிர மற்ற ஒருவர் தான் பயணம் செய்ய முடியும் என்ற விதி எனக்கு தெரியாது. என்னுடன் பயணம் செய்த தங்கராஜ்

தான் வண்டியின் உரிமையாளர். சரக்கு வாகனத்தில் நான் பயணாளியாக பயணிக்க முடியாது என்றும், அவ்வாறு பயணம் செய்தால் அதனால் ஏற்படும் விபத்திற்கு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், வாகனத்தின் உரிமையாளர் தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

5) விபத்திற்கு பின்னிட்டும் நான் பழைய தொழில் தான் செய்து வருகிறேன் என்றும், விபத்தால் எனக்கு எவ்வித ஊனமோ, வருமான இழப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ கோரியுள்ள தொகை மிக அதிகமானது என்றும், 2 ம்எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

6) விபத்து சமயத்தில் நாங்கள் 5 பேர் சென்றோம். யார் யார் எதற்கு சென்றோம் என்றால் நானும், சித்ரா, ரெஜினா 3 பேரும் பழம் எடுக்க பெங்களூருக்கு எடுக்க சென்றோம். மற்ற நபர்கள் சரக்கை எடுத்து வைக்க உடன் வந்தனர்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.02.13 18:43:03 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**